8 செப்டம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 23 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் மண்ணுலகின் அழுகுரலைக் கேட்டல்

# நம் இதயங்கள் திறக்கப்படட்டும்

“எப்பாத்தா.. திறக்கப்படு” ஒரே கட்டளையுடன் காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவரைக் குணப்படுத்துகிறார். “அவருடைய காதுகள் திறக்கப்பட்டன, நாவும் கட்டவிழ்ந்தது” ஆனால் இந்த மனிதனால் தனக்கு என்ன வேண்டும் என்று இயேசுவிடம் கேட்க முடியவில்லை. மற்றவர்கள் அவரை ஆண்டவரிடம் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. இயேசு தனிப்பட்டவர் என்பதை அவர்கள் அறிந்ததனால் அந்த மனிதருக்காக இயேசுவிடம் வந்திருக்க



கூடும். இயேசுவின் மீது அந்த மனிதர்கள் வைத்த நம்பிக்கையும் உறுதியும் இயேசுவைக் கவர்ந்திருக்கவேண்டும். தனக்காக எதுவும் செய்துகொள்ள முடியாத காது கேளாத மற்றும் வாய்பேசமுடியாதவரின் மீது இயேசு இரக்கம் கொண்டு, அந்த அருளடையாளத்தை நிகழ்த்துகிறார்.

தங்களுக்காக அதிகம் செய்ய முடியாதவர்களுக்காகவும், செய்ய முடிந்தவர்களுக்காகவும் இடையே உள்ள வேறுபாட்டை புனித யாக்கோபு குறிப்பிடுகிறார். பல சமயங்களில் நாமும் ‘செல்வாக்கு உள்ள’ ‘செல்வாக்கு இல்லாத’ இவர்களிடையே ஒரு மாறுபாட்டை ஏற்படுத்துகிறோம். இது நம்முடைய திருஅவை சூழலில் கூட நடக்கிறது. செல்வாக்கு, அதிகாரம், மற்றும் பிரபலமானவர்கள் குடும்பம், ஆகியோர் திருஅவை மற்றும் சமூகத்தில் அடிக்கடி கவனத்தை ஈர்க்கிறார்கள்.

நாம் இயேசுவின் மீதுகொண்டுள்ள நம்பிக்கையால் நாம் தனக்கென **குரலெழுப்பமுடியாதவர்களுக்காக அவர்களின் குரலாக நாம் மாறுவதை உறுதிசெய்ய வேண்டும்.** இயேசு இந்த உலகில் இருந்தபோது அனைவருக்கும் குறிப்பாக, பலவீனர்கள், ஏழைகள், விளிம்புநிலையில் இருப்போர் ஆகியோருக்கு உதவிசெய்ய வேண்டுமென்பதே அவருடைய விருப்பமாக இருந்திருக்குமென்பதை நாம் அறிவோம்.

“உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி. “திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள், இதோ உங்கள் கடவுள் உங்களை விடுவிப்பார்” என்று எசாயாவில் கூறப்பட்டுள்ளதுபோல, நமக்கும் இதுபோன்று கூறும் மனப்பான்மை இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோருக்காகவும், பலவீனம் மற்றும் தோல்வியால் சுமைசுமந்திருப்போருக்காகவும் நாம் உறுதுணையாக நிற்கும்போது இயேசுவைப் போல நாமும் மாறுகிறோம். இதுபோன்ற மக்களுக்கு இரண்டாவது வாய்ப்பு தேவை.

பிறரைத் தீர்ப்பிடுவதற்குப் பதிலாக, நம்முடையப் பணியாலும், இறைவேண்டுதல்களாலும் அவர்களை இயேசுவிடம் அழைத்துச்செல்லமுடியும். நம்மால் ஒரு மாற்றத்தை உருவாக்கி, அவர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பை வழங்கமுடியும். “என்னை மன்னித்துவிடு” அல்லது ‘நான் உனக்கு அக்கறை காண்பிக்கிறேன்’ என்று கூறுவதால் நம்மைச் சுற்றியிருக்கும் பலர் நலமடையவும் இது தேவை. பலருடைய உள்ளங்கள் திறக்கப்படவேண்டும். இதைத் தான் அவருடைய சீடர்களாக இருக்கும் நம்மிடம் இயேசு கேட்கிறார்.

உண்மையில் இது அவருடைய கட்டளை, வலிக்கும் வரை நாம் அன்புசெய்யவேண்டும்.

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org

கடவுளின் படைப்பின் பொறுப்பாளர்களாகிய நாம், இந்தப் பூமியை மனித குடும்பத்திற்கு ஒரு அழகான தோட்டமாக மாற்ற அழைக்கப்பட்டுள்ளோம்.

திருத்தந்தை பிரான்சிஸ்







### இன்றைய இறைவார்த்தை:

எசாயா : 35: 4-7

திபா: 146: 7-10

யாக்கோபு : 2: 1-5

மாற்கு 7: 31-37

INTERNAL CIRCULATION ONLY
BUL 36/2024